# SENGUNTHAR
# Daily News

11-08-2026/SEC/DN/454



## செங்குந்தர் பொறியியல் கல்லூரியில் போதைப்பொருள் எதிர்ப்பு உறுதிமொழி ஏற்பு

ஆகஸ்ட் 11, 2026:
நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படியும், தொழில்நுட்பக் கல்வித் துறையின் வழிகாட்டுதலின்படியும், மாணவர்களிடையே போதைப்பொருள் பயன்பாட்டைத் தடுக்கும் வகையிலும், போதைப்பொருட்களின் தீமைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலும் போதைப்பொருள் எதிர்ப்பு உறுதிமொழி நிகழ்ச்சி செங்குந்தர் பொறியியல் கல்லூரியில் இன்று நடைபெற்றது.

இந்நிகழ்வில் திருச்செங்கோடு வட்டார காவல்துறை ஆய்வாளர் திருமதி. தீபா அவர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் சிறப்பு பங்கேற்பாளர்களாக கலந்து கொண்டு, பெருமளவில் திரண்டிருந்த கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு போதைப்பொருட்களின் தீமைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினர். தொடர்ந்து, காவல்துறை அதிகாரிகள், கல்லூரி முதல்வர், துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள், பணியாளர்கள் மற்றும் அனைத்து துறைகளைச் சேர்ந்த மாணவ, மாணவியர்களும் இணைந்து போதைப்பொருள் எதிர்ப்பு உறுதிமொழியை ஏற்றுக்கொண்டனர்.

நிகழ்வில் மாணவர்களின் எதிர்காலத்தை சீரழிக்கும் போதைப்பொருட்களின் தீமைகள், அவை உடல் மற்றும் மனநலத்தில் ஏற்படுத்தும் பாதிப்புகள், கல்வி மற்றும் குடும்ப வாழ்க்கையில் ஏற்படும் சீர்கேடுகள் குறித்து விரிவாக விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. மேலும், மாணவர்கள் போதைப்பொருட்களிலிருந்து முற்றிலும் விலகி, நல்லொழுக்கம், கல்வி, விளையாட்டு மற்றும் சமூகப் பொறுப்புணர்வுடன் சிறந்த எதிர்காலத்தை உருவாக்க வேண்டும் என்பதன் அவசியமும் வலியுறுத்தப்பட்டது.
“போதைப்பொருளைத் தவிர்ப்போம்; வாழ்க்கையை வளமாக்குவோம். போதையற்ற இளைஞர்களை உருவாக்கி, போதையற்ற சமூகத்தை கட்டியெழுப்புவோம்” என்ற உறுதியுடன் மாணவர்கள் அனைவரும் போதைப்பொருள் எதிர்ப்பு உறுதிமொழியை ஏற்றுக்கொண்டனர்.
இந்நிகழ்ச்சி, மாணவர்களை போதைப்பொருட்களின் பாதிப்பிலிருந்து பாதுகாத்து, அவர்களை நல்வழிப்படுத்துவதற்கும், பொறுப்புள்ள இளைஞர்களாக உருவாக்குவதற்கும் செங்குந்தர் பொறியியல் கல்லூரி மேற்கொண்டு வரும் விழிப்புணர்வு நடவடிக்கைகளின் ஒரு முக்கிய அங்கமாக அமைந்தது.



# போதைப்பொருள் எதிர்ப்பு உறுதிமொழி ஏற்பு விழா: செங்குந்தர் பொறியியல் கல்லூரிக்கு மாவட்ட அளவில் இரண்டாம் பரிசு

**ஆகஸ்ட் 11, 2026:**

போதைப்பொருள் பயன்பாட்டைத் தடுக்கும் வகையிலும், போதைப்பொருட்களின் தீமைகள் குறித்து மாணவர்கள் மற்றும் பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலும், இன்று நாமக்கல் மாவட்ட மருத்துவக் கல்லூரி கலையரங்கில், நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் முன்னிலையில் போதைப்பொருள் எதிர்ப்பு உறுதிமொழி ஏற்பு விழா நடைபெற்றது.

இந்நிகழ்வில் தமிழக முதலமைச்சர் அவர்கள் காணொளி வாயிலாக கலந்து கொண்டு, போதைப்பொருள் தடுப்பு மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகளில் சிறப்பாக செயல்பட்ட மாவட்ட அளவிலான சிறந்த அமைப்புகளுக்கு பாராட்டுகளையும் பரிசுகளையும் வழங்கினார்.

நாமக்கல் மாவட்டத்தில் போதைப்பொருள் தடுப்பு மற்றும் விழிப்புணர்வு பணிகளில் சிறப்பாக செயல்பட்ட அமைப்புகளுக்கான போட்டியில் செங்குந்தர் பொறியியல் கல்லூரியின் போதைப்பொருள் தடுப்பு அமைப்பு மாவட்ட அளவில் இரண்டாம் இடத்தைப் பெற்றது. இதற்காக கல்லூரிக்கு ரூ.10,000/- பரிசுத்தொகை வழங்கப்பட்டது.

இப்பரிசினை செங்குந்தர் பொறியியல் கல்லூரியின் முதல்வர், போதைப்பொருள் தடுப்பு ஒருங்கிணைப்பாளர் மற்றும் மாணவர்கள், நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடமிருந்து நேரடியாகப் பெற்றுக் கொண்டனர். இச்சிறப்பான தருணம் கல்லூரி நிர்வாகம், பேராசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியையும் பெருமையையும் அளித்தது.

மாணவர்களிடையே போதைப்பொருள் பயன்பாட்டைத் தடுப்பது, போதைப்பொருட்களின் தீமைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவது மற்றும் போதையற்ற சமுதாயத்தை உருவாக்குவதற்கான பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொண்டு வருவதற்காக செங்குந்தர் பொறியியல் கல்லூரியின் போதைப்பொருள் தடுப்பு அமைப்பிற்கு இந்தப் பாராட்டு கிடைத்துள்ளது.

# STUDENTS CORNER

SENGUNTHAR ENGINEERING COLLEGE
(AUTONOMOUS)
NAAC Accredited with 'A' Grade,
(Approved by AICTE, New Delhi & Affiliated to Anna University, Chennai)
Recognized Under Section 2(f) & 12(B) of the UGC Act, 1956
TIRUCHENGODE- 637 205

CIRCULAR

11.08.2026

Ref .: 027 / SEC / Attendance / 2026

The Management and the Principal appreciate our Students for their **100% (Cent per Cent) Attendance Today (11.08.2026)**.

| Sl.No | Department | Strength | Year |
|---|---|---|---|
| 1 | CIVIL | 12 / 12 | IV |
| 2 | R&A | 27 / 27,10 / 10 | II,III |
| 3 | IT | 59 / 59 | II |
| 4 | Pharm.Tech. | 13 / 13 | IV |

PRINCIPAL

Copy Submitted to the Correspondent, SEC

Copy to:
1. Executive Director
2. All Deans
3. All HODs for staff & Students circulation
4. E-Circular I / C
5. IQAC
6. Office

## நுவலிதமிழ் மன்றம் - தினம் ஒரு திருக்குறள்



குறள் 815:

செய்தேமஞ் சாராச் சிறியவர் புன்கேண்மை எய்தலின் எய்தாமை நன்று.

விளக்கம்:

நமக்குத் துன்பம் வந்த போது உதவி செய்து காப்பாற்றுவதற்கு வராத சிறுமையாளரது புன்மையான நட்பை அடைதலைவிட, அடையாததே நன்மையாகும்

## இலக்கணக் குறிப்பறிதல்

வேற்றுமைத்தொகை

ஒரு தொடரில் வேற்றுமை உருபு மறைந்து வந்து பொருள் உணர்த்துவது வேற்றுமைத் தொகை எனப்படும்.

(எ.கா) ஊட்டி சென்றான்

இத்தொடர் ஊட்டிக்குச் சென்றான் என விரிந்து நின்று பொருள் உணர்த்துகின்றது. இரு சொற்களுக்கும் இடையில் ‘கு’ என்னும் வேற்றுமை உருபு மறைந்து வந்து பொருளை உணர்த்துவதால் இது ‘வேற்றுமைத் தொகை’ எனப்படும்

## பிறமொழிக்கு இணையான தமிழ்ச் சொற்கள்

பிறமொழி : சன்மார்க்கம் தமிழ்மொழி : நல்வழி